அசல்

21.10.40. பெ.ராம.ராம. சிதம்பரஞ் செட்டியார் நீ. கந்தசாமி.

242

அசல் -1 நகல் -

No. 62
19.12.70
Pages 199-202

தமிழ்க்களஞ்சியம்

"இராமநிலையம்"

புதுக்கோட்டை, 21—10—'40.

அன்புடையீர்,

திருவருளால் நலம்.

தமிழகத்தில், சென்ற நாற்பதாண்டுகளாகப் பலவகையாலும் தமிழ்த்தொண்டாற்றிவரும் தமிழ்ப்பெரும்புலவர், பண்டிதமணி, திரு. மு. கதிரேசச் செட்டியாரவர்களுடைய கலைத்திறம், பிறர்மனங் கண்டுமகிழச் சொற்பொழிவாற்றும் வன்மை, மாணவர்கட்குக் கல்வி பயிற்றும் ஆற்றல், தமிழறிஞர்களைத் தாங்கும் வன்மை முதலிய பல நலன்களையும் தாங்கள் அறிவீர்கள். இவர்கள், தனியாக இருந்து தமிழ்த்தொண்டாற்றுவதோடமையாது, மேலைச் சிவபுரிச் சன்மார்க்க சபை, கரந்தைத் தமிழ்ச் சங்கம், மதுரைத் தமிழ்ச்சங்கம் முதலிய கலைக்கழகங்களின் உயிர்த் துணைவராகவும், அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பேராசிரியராகவும், சென்னை, அண்ணாமலை, திருவாங்கூர்ப் பல்கலைக் கழகங்களின் தமிழ்ப் பகுதித் தலைவராகவும், தமிழ்த் தேர்வுத் தலைவராகவும் இருந்து தொண்டாற்றி வருகின்றார்கள். இவர்களுடைய மாணவர்களாக இருந்தும், நண்பர்களாகவிருந்தும், சொற்பொழிவைக் கேட்பவர்களாகவிருந்தும் தமிழ்நலமுணர்ந்து தமிழ்த் தொண்டாற்றும் நன்மக்கள் தமிழ் நாட்டிற் பல்லாயிரவரெனக் கூறுதல் மிகையாகாது. தம்மோடு தொடர்புடையவர்களையெல்லாம் தமிழ்ப் புலவர்களாகச் செய்யும் பேராற்றல் படைத்தவர்களென்று உறுதியாகக் கூறலாம்.

இத்தகைய பலநலன்களும் வாய்ந்த நம் பண்டிதமணி அவர்களுடைய அறுபதாவது ஆண்டு நிறைவு விழா விஷு ஆண்டு புரட்டாசித் திங்கள் (1941-செப்டம்பர்) நிகழவிருக்கிறது. அவ்வமயம், தமிழகத்தின் பேரன்பை அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ளுமுகமாகத் தமிழ்நாட்டுப் பேரறிஞர் பலராலும் எழுதப்பெற்ற கட்டுரைகளைக் கொண்ட ஒரு கட்டுரைத்தொகுதி வெளியிட்டு அளிக்கத் தமிழன்பர்கள் எண்ணியுள்ளார்கள்.

நம் பண்டிதமணியிடத்துப் பேரன்புடைய தாங்கள் தயைசெய்து ஒரு கட்டுரை யெழுதி உதவ வேண்டுகிறோம். இக் கட்டுரைத் தொகுதியை விஷு ஆண்டு வைகாசித் திங்கள் முதல் தேதியன்று அச்சேற்ற வேண்டியிருக்கின்றமையின், தங்கள் கட்டுரையைச் சித்திரைத் திங்கள் இறுதிக்குள் எழுதியனுப்ப வேண்டுகிறோம். தாங்கள் எப்பொருள்பற்றி யெழுத எண்ணியுள்ளீர்கள் என்பதைத் தயைசெய்து இயன்ற விரைவில் தெரிவிக்க வேண்டுகிறோம். நாம் குறித்துள்ள எல்லை, சித்திரைத் திங்களின் இறுதியாயினும், இவ்வாண்டு தைத் திங்களுக்குள்ளேயே கட்டுரைகள் கிடைத்தாற் பேருதவியாக இருக்குமென்பதையுந் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

தங்கள் அன்பான மறுமொழியை எதிர்பார்க்கும்,

தங்களன்புள்ள,

பெ. ராம. ராம. சிதம்பரச்செட்டியார்,

நீ. கந்தசாமி.

ஸ்ரீ. மகா. மகோ. உபாத்யாய டாக்டர். V. ஸ்வாமிநாதையர் அ.

கட்டுரைகளையும், தங்கள் மறுமொழியையும், 'திரு. பெ. ராம. ராம. சித. சிதம்பரச் செட்டியாரவர்கள் இராமநிலையம், மார்த்தாண்டபுரம், புதுக்கோட்டை.' என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டுகிறோம்.

அசல்

21.10.40. பெ.ராம.ராம. சிதம்பரஞ் செட்டியார்

P. 199-202.
தமிழ்க்
கடிதங்கள்.
No. 62.

(19)